கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு
முன்னிலை: D.மோகன்குமார்.,B.Com.,M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2025–ம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ம் நாள் புதன்கிழமை
IA 3/2023, 4/2023 மற்றும் 5/2023 in OS.No. 120/2015

சந்திரா

– மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சுப்ரமணி (இறந்தார்)
2. பழனிசாமி (இறந்தார்)
3. குழந்தைவேல் (இறந்தார்)
4. நல்லம்மாள்
5. முத்தாயி
6. ராசம்மாள்
7. மீனாட்சி
8. வசந்தா
9. மஞ்சு
10. முத்தாயி

– எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

11. மல்லிகா
12. செல்வி

– எதிர்மனுதாரர்கள் /உத்தேசத்தரப்பினர்கள்

இம்மனு என் முன்பாக 23.07.2025–ம் தேதியாகிய இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டபடியாலும், 4, 5, 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.T.V.மாணிக்கவேலு அவர்கள் ஆஜராகியும், 6–ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.P.அருள்நாதன் அவர்கள் ஆஜராகியும், 11, 12 உத்தேசதரப்பினர்கள் அழைப்பாணை அனுப்பி போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

01. மனுதாரர்/வாதி தரப்பில் இறந்துபோன 2–ம் எதிர்மனுதார்/பிரதிவாதியின் வாரிசை உரிய காலத்தில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால், ஏற்பட்ட காலதாமதமான 644 நாட்களை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் இ.ம.எண்.03/2023 என்ற மனுவும், 2–ம் பிரதிவாதி இறந்த காரணத்தினால் உரிய காலத்தில் அவரது வாரிசுதார்களை உத்தேசதரப்பினராக சேர்க்க தவறியதால் ஏற்பட்ட வழக்கு ரத்துபோன

உத்தரவினை (Abate) ரத்து செய்வதற்காக உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22, விதி 9–ன் கீழ் இ.ம.எண்.04/2023 என்ற மனுவும், மேற்படி உத்தேசதரப்பினரை 11 மற்றும் 12 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4–ன் கீழ் இ.ம.எண்.05/2023 என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுக்கள் சார்ந்த வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது 2–ம் பிரதிவாதி பழனிசாமி கடந்த 02.12.2021–ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பு மற்றும் நோயின் காரணமாக உரிய நேரத்தில் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. அதனால் இறந்து போன 2–ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளை 90 நாட்களுக்குள் சேர்க்காத காரணத்தினால் மேற்படி வழக்கு அற்றுப்போய்விட்டது. எனவே இறந்து போன பழனிசாமியின் வாரிசுகளை சேர்க்காமல் வழக்கு அற்றுபோய்விட்டதால் அதனை ரத்து செய்ய மனுதாக்கல் செய்ய ஏற்பட்ட 644 நாட்களை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5–ன் கீழ் இ.ம.எண்.03/2023 என்ற மனுவும், 3–ம் பிரதிவாதி இறந்த தேதியிலிருந்து உரிய காலமான 90 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காததால் மேற்படி மனுவினை அபேட் செய்யப்பட்டதை ரத்து செய்வதற்காக உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9–ன் கீழ் இ.ம.எண்–04/2023 என்ற மனுவும், மேற்படி உத்தேசதரப்பினரை 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4–ன் கீழ் இ.ம.எண்.05/2023 என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

03) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்</u>:–

இந்த மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். மேலும் இந்த மனுதாரர்/வாதிக்கு மனுவில் கோரியுள்ளபடி எந்த உரிமையும் கிடைக்கதக்கல்ல. மேலும் இந்த மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல.இறந்து போன 2–ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டும் என்பதற்கான காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

04) இருதரப்பிலும் சாட்சியங்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05) மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

06) தீர்வு :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மேற்படி வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது 2-ம் பிரதிவாதி பழனிசாமி என்பவர் இறந்துவிட்டார் என்பதும், அவரின் சட்டப்படியான வாரிசுகள் தான் இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள 11 மற்றும் 12-ம் உத்தேசதரப்பினர்கள் என்பதை குறித்து மேற்படி மனுவின் 4, 5, 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்காமல் பதில் எதுவும் இல்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்கள். மேற்படி மனுக்களின் 6-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், உத்தேசதரப்பினர்கள் இறந்து போன பழனிசாமியின் வாரிசுகள் என மறுக்கவில்லை. மேலும் உத்தேசதரப்பினர்களான மல்லிகா, செல்வி ஆகிய இருவரும் அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். மேலும் இறந்து போன 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி பழனிசாமி என்பவருக்கு உத்தேசதப்பினர்களை தவிர பிற வாரிசுகள் இருப்பதாகவும் சொல்லப்படவில்லை. மேலும், இந்த வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்பதால் தாவா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட உரிமையுள்ளவர்கள் வாரிசுகள் என்ற முறையில் தரப்பினராக சேர்க்கப்படவேண்டும். எனவே, நீதியின் நலன் கருதி மேற்சொன்ன மூன்று மனுக்களும் அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை. எனவே, நீதியின் நலன் கருதி மேற்சொன்ன மூன்று மனுக்களும் அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இ.ம.எண். 3/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இ.ம.எண். 4/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இ.ம.எண். 5/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025–ம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.07.23 19:50:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

D MOHANKUMAR
Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.07.23 19:51:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 03/2023, 04/2023,
05/2023 இன் அசல்.வ.எண்.120/2015
நாள்.23.07.2025.